I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
<u>OS.NO.113/2019</u>

**Name** : Palani
**Father/Husband Name** : Govindasamy
**Age** : 50

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.11.2025

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்: <u>04.40 p.m</u>**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் பாக பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த சொத்தை 3 பங்காக பிரித்து ஆளுக்கு ஒன்றாக கொடுக்கும் படி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மோகனரங்கன்– 1வது பிரதிவாதி என் அண்ணன். 2வது பரிதிவாதி மணி என்கிற சுப்ரமணியன் என் அண்ணன். 2வது பிரதிவாதி அவருடைய பங்கை 1வது பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

இந்த நிலத்தில் நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் என் அப்பா கட்டிய வீடு. என் நிலத்தில் நான் ஒரு வீடு கட்டியுள்ளேன். அந்த வீட்டில் தான் நான் குடியுள்ளேன் என்றால் என் அப்பா கட்டிய வீட்டை எனக்கு கொடுத்தார், அதில் நான் குடியிருக்கிறேன். நான் வீடு கட்டவில்லை, என் அப்பா கட்டியது.

(சாட்சி விசாரணைக்கு ஒத்துழைக்காமல் சாட்சி மற்றும் அவரது மனைவியும் சண்டை போட்டு கொண்டு சரியான முறையில் பதில்

கொடுக்காமல் நீதிமன்றத்திற்கு கட்டுப்படாமல் சத்தம் போட்டார்கள். மேலும் அவரது வழக்கறிஞர் அவர்களும் நாங்கள் சொன்னாலும் ஒத்து கொள்ள மாட்டேன் என்று சொல்லிய நிலையில் ஒத்தி வைக்கப்படுகிறது. மேலும் கையெழுத்து போடாமலும் நீதிமன்றத்தை விட்டு சென்று விட்டார். எனவே அவரது கையெழுத்து பெறவில்லை.)

**விசாரணை முடிந்த நேரம்:** 04.40 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2025.11.13 17:37:20 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.